# Social Issues Revealed in the Novel 'Alam'

**L. Peter Paul**
*Research Scholar, University of Calicut*
*Department of Tamil & Research Centre, Govt.College Chittur, Palakkad*

**Abstract**
*People living in the coastal areas of Tamil Nadu, especially the salt-producing 'Alam' areas, face social problems. His works highlight the sufferings of the workers, such as poverty and unemployment, as well as the social problems prevailing there, such as caste and economic oppression, gender inequality, and color discrimination. Understanding the problems faced by the lower class people and their mental anguish, the author, Su. Tamilselvi, records his views, standing in support of them.*
***Keywords :*** *Su.Tamilselvi, Alam, Tamilselvi Novels, Marginalized People, Colour Discrimimation, Racism*

மலர்: 10

சிறப்பிதழ்: 1

மாதம்: ஜனவரி

வருடம்: 2026

**P-ISSN: 2454-3993**

**E-ISSN: 2582-2810**

**DOI:**
https://doi.org/10.5281/zenodo.18358494

**References**

1. Su. Tamilselvi- Alam, Fivth Edition:June,2019, New Century Book House (P) Ltd, Ambattur, Chennai 600 098
2. A. Vennila, - Nigazh Mugam, First Edition 2012, Agani Publishing House.
3. Pavannan – Irandu Marangal, First Edition 2008, Puthumaipithan Publishing House

# "அளம்" புதினம் வெளிக்காட்டும் சமூகச் சிக்கல்கள்

***லா. பீட்டர் பால்***
முனைவர் பட்ட ஆய்வாளர்
கள்ளிக்கோட்டை பல்கலைக்கழகம்,
தமிழ்த்துறை ஆய்வு மையம்,
அரசுக் கல்லூரி சித்தூர், பாலக்காடு

***ஆய்வுச் சுருக்கம்***
*தமிழகத்தின் கடலோரப் பகுதிகளில் குறிப்பாக உப்பு விளைவிக்கும் "அளம்" பகுதிகளில் வாழும் மக்கள் சமூகச்சிக்கல்களை எதிர்கொள்கின்றனர். தொழிலாளர்கள் அனுபவிக்கும் வறுமை, வேலையின்மை போன்ற துயரங்களையும் அங்கு நிலவும் சாதிய, பொருளாதார ஒடுக்குமுறைகளைள், பாலின சமத்துவமின்மை, நிறப்பாகுபாடு முதலிய சமூகச்சிக்கல்களை இவரது படைப்புகள் வெளிச்சமிட்டுக் காட்டுகின்றன. அடித்தட்டு மக்கள் சந்திக்கின்ற சிக்கல்களையும், அவர்களின் மன வேதனையும் உணர்ந்து அவர்களுக்கு ஆதரவாக நின்று ஆசிரியர் சு.தமிழ்ச்செல்வி தம் கருத்துக்களை பதிவு செய்கிறார்.*
***முக்கியச் சொற்கள்:*** *சு.தமிழ்ச்செல்வி, தமிழ்ச்செல்வி புதினங்கள், விளிம்புநிலை மக்கள், நிறப்பாகுபாடு, சாதி வெறி*

## *நிறப்பாகுபாடு*

*நிறப்பாகுபாடு என்பது ஒருவரின் தோல் நிறத்தின் அடிப்படையில் மனிதர்களைத் தாழ்வாக நடத்தும் இழிவான செயல். நிறப்பாகுபாட்டின் காரணமாக அளம் புதினத்தில் சுப்பையனின்* பெண்குழந்தைகள் சமூகத்தினரால் அவமதிப்புக்கு ஆளாக்கப்படுகின்றனர். இச்சிக்கல்களில் பெண்கள் மட்டுமே உள்ளாக்கப்படுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

*சுப்பையனும் சுந்தராம்பாளும் மாநிறம். அவர்களுக்குப் பிறந்த மூன்று குழந்தைகளும் அட்டக் கருப்பாய் இருந்தார்கள். இவர்கள் மூவரும் கருப்பாயிருப்பதைப் பார்த்து மக்கள் கேலி செய்கிறார்கள். இதனை,*

> "கணேசனோட பொண்ணுவ மூணும் வெளக்கிவச்ச குத்துவிளக்கு மாறி செக்கச் செவேலுன்னு இருக்குதுவ, அவந்தம்பி பொண்ணுவொளப்பாரு ஆறுமக்கட்டுத் தெருவுல பொறந்தது மேரி இருக்குறத்த" *(அளம், ப.44)*

*என்ற வரிகளில் கருப்பாய் உள்ளவர்கள் மீதான இச்சமூகத்தின் மதிப்பீடு எவ்வளவு தூரம் தரக்குறைவானதாக விளங்குகின்றது என்பதை அறிய முடிகிறது.*

வடிவாம்பாளுக்குப் பிறகு வயதுக்கு வந்த கணேசனின் இரண்டு பெண்களும் ஆறு மாதத்திலேயே திருமணம் செய்துகொண்டனர். சொந்தத்திலேயே அவளைத் திருமணம் செய்துகொண்டனர்.

கணேசன் அந்தச் சம்பந்தத்தியில் வடிவாம்பாளைக் கொடுத்துவிட எவ்வளவோ முயற்சி செய்து பார்த்தும் முடியவில்லை. அவனைப் பெற்றவர்கள்,

> **"குடுத்தா ஓம் பொண்ணக்குடு. இல்லாட்டி எங்கள ஆளவுடு. அந்தக் கருப்பிய கட்டிக்கிட முடியா."**
> ***(அளம்,ப.43)***

என எல்லோர் காதிலும் விழும்படியாகச் சொன்னார்கள். இது வடிவாம்பாள் காதிலும் விழுந்தது. கருப்பாய் இருக்கிற காரணத்தினாலேயே அவளுக்கு உரிய வயதில் திருமணம் நடக்காமல் நாட்கள் கடந்து போவதையும் படைப்பின் போக்கில் அறிய முடிகிறது. இந்த சமூகம் அவளை வெறுப்பதைக் கண்டு,

**"எத்துனயோ புள்ளைவோ செத்தே பொறக்குதுவொ பொறந்தும் சாவுதுவொ வளர்ந்தும் சாவுதுவொஅதுமேரி நாஞ் செத்து ருக்கக்கொடாதா (அளம், ப.49)**

என நினைத்து வருத்தப்படுகிறாள் வடிவாம்பாள். கிராமத்தில் வாழக்கூடிய கருப்பாக இருக்கிற பெண்களுக்கு திருமணம் என்பது தாமதிக்கப்பட்ட ஒன்றாகவே இருக்கிறது.

**உரிமை மறுக்கப்படல்**

சிங்கப்பூர் போன சுப்பையன் திரும்பி வரவேயில்லை. அவள் வீட்டில் ஆண் இல்லாததால் ஊர்ப் பொது நிலத்தை அளம் கட்டும்போது சுந்தராம்பாளுக்குப் பங்கு கொடுக்கவில்லை. இதனால் அவள் பெரிதும் ஏமாற்றமடைந்தாள். ஆண்கள் இல்லாத குடும்பத்தை சமுதாயம் ஏளனமாகவே பார்த்தது. இதனை,

**"ஒன்னகிட்ட எப்புடிச் சொல்லுவாவொ? ஆம்புளப் புள்ளயப் பெத்திருக்கணும். இல்லாட்டி ஆம்புடயானாவது வூட்டுல இருக்கணும். ஒனக்குத்தான் எதுவுமே இல்லையே.எப்புடிச் சொல்லுவாவோ? (அளம், ப.199)**

ஊரார் அளத்தைச் சமமாய் பிரித்து வேலை செய்தனர். அனைவருக்கும் பட்டா கிடைத்தது. சுந்தராம்பாள் குடும்பத்திற்கு மட்டும் அளம் கிடைக்கவில்லை. இதனை நினைத்து,

"ஊருல எல்லாருக்கும் சொந்தமா அளமிருக்கே. நம்மளுக்கு மட்டும் இல்லாமபெயிட்டே. இந்த ஆம்புள இருந்திருந்தா இப்புடி நம்மளுக்கு கெடக்காம போயிருக்குமா ? (அளம், ப. 218) என்று நினைத்து சுந்தராம்பாள் வருத்தப்படுகிறாள். ஆண் என்பவன் உடலால் வலிமை உடையவனாகவும், பெண் என்பவள் வலிமை குறைந்தவளாகவும் ஆணாதிக்க சமூகத்தினர் நினைக்கின்றனர். இது கிராமத்தில் வலுப்பெற்று காணப்படுகிறது.

**வாழாவெட்டி**

சமூகத்தில் பெண்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளில் "வாழாவெட்டி" என்ற துயர் ஆழமாக வேரூன்றிய சமூகத்தீமையாகும். கணவனை இழந்த பெண்கள் பல்வேறு துயரங்களுக்கு ஆளாகின்றனர். சமூகத்தில் அவர்களை குறைவாகவே மதிப்பிடுகிறார்கள். அளம் புதினத்தில் வடிவாம்பாளின் கணவன் இறந்த பின்னர் அவள் எங்கும் செல்லாமல் வீட்டிலேயே இருக்கிறாள். குளத்தில் குளிப்பதற்குக் கூட யாரும் இல்லாத நேரத்தில் சென்று குளித்து விட்டு வருகிறாள்.

அஞ்சம்மாள் அதே ஊரைச் சேர்ந்த பூச்சி என்பவனை இளம் வயதிலிருந்தே விரும்புகிறாள். இருவரும் ஒருவரை ஒருவர் விரும்புகின்றனர். அவர்கள் விரும்புவது யாருக்கும் தெரியாது. அவனுடைய வீட்டில் கல்யாணப் பேச்சு வந்தவுடன் அஞ்சம்மாளைத் தான் கட்டிக் கொள்வேன் என்று பிடிவாதமாகச் சொன்னான். அதற்கு அவன் அம்மா சொல்வது மிகவும் குறிப்பிடத்தக்கது.

"அந்தப் பொம்புளையோட புருசன் கப்பலுக்கு போறன்னுட்டுப் போனவந்தாங். உசுரோட இருக்குறானா இல்ல செத்தானான்னே ஒண்ணுந் தெரியல. மொத்திய கட்டிக் குடுத்தாவ ஒரு எடத்துக்கு ரெண்டெடமா. ரெண்டெடத்துலயுமே மூணேமுக்கா நாளி இருந்து வாளாம முளுங்கிப்புட்டு மூளியா வந்துட்டு. அதுதாம் அப்படின்னாக்க நடுப் பொண்ணக் கட்டிக் கொடுத்தாவொளெ அதாவது பிருசங்கொடயிருந்து ஒழுங்கா வாழ்ந்திச்சா அதுவும் வாழாவெட்டியா வந்து உக்காந்திருக்கு. அந்தப் பொண்ணுவொ இருந்து வாளாதுவொ." (அளம்.ப.266-267)

சுந்தராம்பாள் குடும்பத்தை இச்சமுதாய மக்கள் எவ்வாறு பார்க்கின்றனர் என்பதைப் பூச்சியின் அம்மா வாயிலாக ஆசிரியர் பதிவு செய்கிறார்.

**பாலின சமத்துவமின்மை**

*சமூகத்தில் ஆண் பெண் என்ற இருபெறும் பாலினப்பிரிவுகள் உள்ளன. இவ்விரு பிரிவுகளும் சம மரியாதைக்குரியவையே. ஆனால் சமூகம், மதம் ஆகிய நிறுவனங்கள் பெண்ணை இரண்டாம் இத்திற்குத் தள்ளின. அளம் புதினத்தில், உப்பளத்தில் ஆண்களோடு பெண்களும் சேர்ந்து உப்பள்ளும் வேலைகளைப்பார்ப்பார்கள். அளம் அமைக்கும்போது கரை கட்டுவது, வாய்க்கால் அமைப்பது போன்ற வேலைகளுக்குப் பெண்களை சேர்த்துக்கொள்வதில்லை.*

*அளம் புதினத்தில் வேதப்பன் தன் அம்மாவுடன் அளத்து வேலைக்குச் செல்லும் போது வேதப்பன் மட்டுமே தேநீர் குடிக்கிறான். மனைவி வந்தபின் அவளை விட்டுவிட்டு குடிக்க அவன் விரும்பாததால் ராசாம்பாளுக்கும் மறைமுகமாகத் தேநீர் வாங்கிக் கொடுக்கிறான். வேலை செய்யும் ஆண்களும் பெண்களும் கடின உழைப்பாளிகளாக இருந்தாலும் ஆண்கள் மட்டும்தான் கடைக்குப்போய்த் தேநீர் குடிப்பார்கள். ஆண்களோடு பெண்கள் தேநீர் குடிக்க அனுமதிக்கவில்லை.*

*“சரிக்கி சரியா ஆம்புளையோட போயி டீ கடையில டீ குடிக்காவுது. ஒலவம் தாங்குமா” (அளம், ப.200) என்ற வரிகளின் வாயிலாக ஆசிரியர் பாலின சமத்துவமின்மையை வெளிப்படுத்துகிறார்.*

*அம்பை ஆணுக்கு அதிக அதிகாரம் அவனது பாலினத்தால் வழங்கப்படுவதாகக் கூறுகின்றார். உலகம்முழுவதும்நிறையசந்தர்ப்பங்களில்ஆண், ஆணா வாழறான். வாழுகின்ற சந்தர்ப்பத்தில் தான் ஒரு ஆண் என்று சொல்லிக்கொண்டு வாழ தேவையிருப்பதில்லை. ஏன்னா வாழ்க்கை முழுவதும் அவனுக்கு ஆண் என்ற அதிகாரம் படவிக் கிடக்கிறது.*

*(அ.வெண்ணிலா, நிகழ்முகம், ப.20-21) என்று அம்பை இவ்வரிகளின் வாயிலாக பதிவு செய்கிறார்.*

**குழந்தைத் தொழில்**

*அளம் புதினத்தில் அஞ்சம்மாள் தாயின் குடும்ப பாரத்தைக் குறைக்க எண்ணி, தன்னுடைய தாய்க்கு தெரியாமல் உப்பள வேலைக்கு செல்கிறாள். கருங்களி தூக்குவதற்குக் கனமாக இருக்கும். சிறுவர்கள் ஒவ்வொரு கூடையாய்க் கொண்டு வந்து போடும் போது கண்காணியிடம் தன் பெயரைச் சொல்லி ஓலையில் கோடு போட சொல்கிறார்கள். கடைசியாய் எத்தனை கூடை வருகிறதோ அதற்குத் தகுந்தபடி அவர்களுக் குக் கூலி கிடைக்கின்றது. சீட்டுக் கூடை தூக்கும் வேலைகளுக்குப் பெண்பிள்ளைகளை அழைப்பதில்லை இதனால் அஞ்சம்மாள் அவளுடைய கூட்டாளி பூச்சி என்பவனின் கிழிந்த சட்டையை வாங்கி மாட்டிக்கொண்டு பையனாக மாறுகின்றாள். அஞ்சம்மாளும் ஆண்பிள்ளைகளோடு சீட்டுக்கூடை தூக்குகிறாள். கல்வி கற்க வேண்டிய வயதில் வறுமையின் காரணமாக குழந்தைகள் தொழிலாளிகளாக மாறுகின்றனர். இதனை,*

***நாம் பூச்சியோட சீட்டுக்கூடத் தூக்கப் போனங் செலவுக்கு காசில்லாம செருமப்படுறியேன்னுதாம்மா நாம் போனங்***
***(அளம், ப.124)***

*என்ற வரிகளின் வாயிலாக குடும்ப வறுமை சிறுவர்களை குழந்தைத் தொழிலாளர் நிலைக்குத் தள்ளுகிறது என்பதை ஆசிரியர் இவ்வரிகளின் வாயிலாக பதிவு செய்கிறார்.*

*இனிப்பும் கசப்பும் என்ற கதை குழந்தைத் தொழிலாளர்கள் ஆவதற்கு வறுமைதான் காரணம் என்கிறது. இக்கதையில் இலட்ச ரூபாய் சீட்டு கட்டி ஏமாற்றம் அடைந்தபோது அம்சவல்லியின் கணவன் தற்கொலை செய்துவிடுகிறான். அதன்பின், அம்சவல்லி ஆண்குழந்தையை மட்டும் படிக்கவைத்து விட்டு பெண்குழந்தைகளை வேலைக்கு அனுப்புகிறாள். இதனை,*

*“மூணு பொண்ணுங்களும் பெரிசாயி நிக்குது என்ன செய்ய முடியும் சொல்லுங்க. ஒருத்தி பிளாஸ்டிக் கம்பெனியில் வேலைக்குப்போறா இன்னொருத்தி அஜீஸ் நகர்ல ஒரு கம்யூட்டர் கம்பெனியில இருக்கறா. மூணாவது பொண்ணு ரெடிமேட் துணிதைக்க போவுது. சின்ன பையன் மட்டும் படிக்கிறான். (பாவண்ணன், இரண்டு மரங்கள், ப. 55)*

என்ற அம்சவல்லியின் கூற்று சிறுவயதிலேயே பெண்குழந்தைகளை வேலைக்கு அனுப்புவதைக் குறித்து பேசுகிறது.

### சாதி வெறி

அளம் புதினத்தில் புயல், மழை, இயற்கைச் சீற்றம் போன்ற காரணங்களினால் உயிர் இழப்புகளும் கடும் பஞ்சமும் உருவாகிறது. இதனால் அந்த சமுதாயத்திலுள்ள மக்கள் உணவுக்கு வழியில்லாமல் துன்பப்படுகின்றனர். அடிக்கடி இதுபோன்ற இயற்கைச் சீற்றங்களினால் மக்கள் பாதிக்கப்படுகின்றனர். பசியும் பட்டினியுமாக இருந்த மக்கள் ஊரில் கிடைக்கின்ற கொட்டிக் கிழங்கும், பனங்கிழங்கும் மட்டுமே சாப்பிட்டு உயிர்பிழைத்து வருகிறார்கள்.

புயல் அடித்ததிற்காக அரிசி, மண்ணெண்ணெய், வீட்டுக்கு நாற்பது ரூபாய் என உதவித்தொகை எல்லா ஊர்களிலும் கொடுத்தனர். ஆனால் இவர்கள் ஊர் வளவனாற்றாக்கரைக்கு மட்டும் எதுவும் கிடைக்கவில்லை. இவர்களுக்கு எதுவும் கிடைக்காததற்கு காரணம் அருணாச்சலம்.

அருணாச்சலம் என்பவனுக்கு சுற்றுவட்டாரத்தில் நல்ல செல்வாக்கு இருந்தது. ஆரம்பத்தில் அவன் சாதாரணமாக இருந்தான். அதன்பிறகு வேதாரண்யத்தில் கடத்தல் தொழில் செய்தான். கடத்தல் பொருட்களை கொண்டு வருபவர்களை நன்கு உபசரித்து, இரவு நேரம் ஆனதும் அவனைக் கொன்று தோட்டத்தில் புதைத்து விடுவான். இப்படிப்பட்ட அருணாச்சலம் சாதி வெறி பிடித்தவனாக இருந்தான். இவன் அரசாங்கத்திடமிருந்து மக்களுக்கு வந்த உதவிகளையும் சலுகைகளையும் கிடைக்கவிடாமல் செய்கிறான். இவன் அதிகார பலம் உடையவனாக இருப்பதால் அரசாங்கத்தினர் அவனுடைய பேச்சைக் கேட்பார்கள். அவனுடைய ஊரைச் சேர்ந்தவர்களுக்கு மட்டும் அவன் எல்லாவற்றையும் செய்து கொடுத்தான். எல்லா ஊர்களிலும் வாய்க்காலுக்கு வாய்க்கால் பாலம் கட்டுகிறார்கள். ரோடு போடுகிறார்கள். ஆனால் இவர்களுடைய ஊருக்கு மட்டும் எந்த சலுகையும் கிடைக்கவில்லை. எதுவும் கிடைக்காதவாறு தடுத்து விடுகிறான் அருணாச்சலம். இதனை,

“அவருக்கு எல்லா இடத்திலயும் சலுவண்ண. அவருசொன்னா எல்லா அதிகாரிகளுமே கேட்பானுவொளாண்ணே. எல்லா ஊருலயும் வாய்க்காலுக்கு வாய்க்கால் பாலம் கட்டுறானுவொ. ரோடு போடுறானுவொ நம்ம பாத்துகிட்டுத்தான இருக்கிறம்? நம்ம ஊருக்கு பாலங்கட்டுறன் ரோடு போடுறமுன்னு இதுவரக்கிம் யாராவது கிட்ட வந்துருக்கிறானுவொளாண்ண? எல்லாத்துக்கும் அருணாயலாம்தாண்ணே காரணம்” (அளம், ப.105) என்று கூறுவதின் வாயிலாக அருணாச்சலம் என்னும் ஒரு தனிமனிதன் தனது அதிகாரத்தினால் ஒரு சமுதாயத்திற்கு கிடைக்க வேண்டிய உதவிகள் கிடைக்காமல் போகிறது.

அருணாச்சலம் இவர்களுடைய ஜாதியை ஏளனமாகப் பார்த்து முன்பு செய்த செயல் குறிப்பிடப்படுகிறது. முருங்கையன் என்பவர் சவுக்குமரம் ஏற்றிக்கொண்டு வேதாரண்யம் போய் மரத்தை இறக்கி விட்டு வெறும் வண்டியுடன் திரும்பி வந்து கொண்டிருந்தார். வண்டியில் பூட்டியிருந்த மாடுகள் நன்றாக கொழுகொழுவென்று இருக்கும். கன்றுகளாக இருந்தபோது சந்தையிலிருந்து பிடித்து வந்து அவைகளை நன்றாக பராமரித்து வளர்த்தார். அந்த மாடுகளை அருணாச்சலம்,

“ஒனக்கெல்லாம் எதுக்குடா இந்த மேரி மாடு. கொத்தலோ வத்தலோ சந்தையில் பார்த்துப் புடிச்சிக்க. இந்தா இத எடுத்துகிட்டு வந்த வழியப் பார்த்து ஒழுங்காப் போய்ச்சேரு.நின்னுகிட்டேயிருந்த இதுவுங் கெடக்காது. (அளம், ப.109)

என பதினைந்து ரூபாயைத் தூக்கி போட்டு முருங்கையனை மிரட்டி அந்த மாடுகள் இரண்டையும் பிடுங்கிக் கொண்டான். நீண்ட நாட்கள் மாடுகளை இழந்த சோகத்தில் அவர் குடும்பம் இருந்தது. இதுபோன்று அனேக குடும்பத்தினரும், ஆதனூர் ஊரைச் சேர்ந்த பிற மக்களும் அவனால் பாதிக்கப்பட்டிருந்தனர் என்பதனை ஆசிரியர் பதிவு செய்கிறார். இறுதியில் பாதிக்கப்பட்ட ஊர் மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து அருணாச்சலத்தின் அக்கிரமச் செயலுக்கு முடிவு கட்டுகிறார்கள்.

**வேலையின்மை**

அளம் புதினத்தில் இடம்பெறுகின்ற கதைமாந்தர்களில் பலரும் வேலையின்மை, வறுமை போன்ற சிக்கல்களினால் துன்பப்படுகிறார்கள். கப்பல்கார இராமையாவுடன் வெளிநாடு சென்ற ஒரு சில குடும்பங்கள் மட்டுமே போதுமான வசதி உடையவர்களாகவும், சமூகத்தில் நல்ல நிலமையில் இருப்பவர்களாகவும் சித்தரிக்கப்படுகிறார்கள். ஊர் மக்களில் பெரும்பான்மையினரும் அளத்து வேலையை மட்டுமே நம்பிக்கொண்டு பிழைப்பை நடத்துகிறார்கள். அளம் புதினத்தில் வேலையின்மை காரணமாக மக்கள் தம் சொந்த ஊரை விட்டு இடம்பெயர்ந்து சொல்கிறார்கள். இதனை,

**"நம்ம ஊருல நெறய பேரு வூரவுட்டே பெயிட்டாவொம்மா"**

"ஆமா போவவேண்டியாங் ஒண்ணுக்கும் வழியில்லாத வூரிக்குள்ள இருந்துகிட்டு என்னத்த பண்ணுற. வேல வெட்டியும் இல்ல வெல்லாமயும் இல்ல. வயத்து பசிக்கி மண்ணய அள்ளித்திங்க முடியும்? (அளம், ப.170)

என்ற வரிகளின் வாயிலாக வேலையின்மை காரணமாகவும் குடும்ப வறுமை காரணமாகவும் மக்கள் இடம்பெயர்ந்து செல்வதை ஆசிரியர் பதிவு செய்கிறார்.

சாகுபடி பொய்த்துப் போனதால் பெரும்பாலான ஆண்கள் அளத்திற்கு வேலைக்கு போனார்கள். விளைச்சல் கிடைக்காமல் போனதால் மக்கள் சாப்பாட்டிற்கு வழியில்லாமல் துன்பப்படுகின்றனர். வறுமை காரணமாக கீரையைச் சுண்டித் தின்கிறார்கள். புளியங்கொட்டையை வறுத்துத் தின்கிறார்கள். அழலைக் கொடியிலுள்ள காய்கறிகளின் கொட்டிய விதையை வறுத்து அரைத்துக் கிண்டித் தின்கிறார்கள். கொட்டிக் கிழங்கு, பனங் கிழங்கு, பனம் பழம் போன்றவற்றையும் தின்கிறார்கள். மக்கள் வெவ்வேறு நிலைகளில் துன்பப்படுவதை படைப்பாளர் சு.தமிழ்ச் செல்வியின் கூற்று வழியே அறிந்து கொள்ளலாம்.

"சனங்கள் பிழைப்பதற்கு வழியில்லாமல் போனது. ஊரில் ஆடுமாடுகள் இல்லை. நெல்லுநீரு விளையவில்லை. பனங்கிழங்கும் கிடைக்காமல் போய்விட்டது. மின்னிக்கிழங்கும் கொட்டிக் கிழங்கும் காரக்கொட்டிக் கிழங்கும் தான் சனங்களுக்கு உணவாக இருந்து உயிர் காத்தது. இந்தக் கிழங்குகளுக்காகக் கூட ஜனங்களுக்குள் சண்டை போட்டுக் கொண்டார்கள். (அளம், ப.157)

**முடிவுரை**

அளம் புதினத்தில் சமூகச் சிக்கல்களால் அடித்தட்டு மக்கள் பாதிக்கப்படுகின்றனர். சமூகத்தில் இருக்கின்ற கட்டுப்பாடுகள் பாமர மக்களுக்கு சாதகமாக இல்லை. மாறாக மேலும் அவர்களை துன்பத்தில் தள்ளுவதாக உள்ளது. பெண்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகள் அவர்களுடைய வாழ்வை சீர்குழைக்கிறது. சமூகத்தில் பெண்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளைளையும், பொருளாதாரச் சிக்கல்களையும், அடித்தட்டு மக்கள் சந்திக்கின்ற சிக்கல்களையும் அவர்களின் மன வேதனையையும் உணர்ந்து அவர்களுக்கு ஆதரவாக நின்று ஆசிரியர் சு.தமிழ்ச்செல்வி தம் கருத்துக்களை பதிவு செய்கிறார் என்பதை இக்கட்டுரையின் மூலம் அறிய முடிகிறது.

**துணைநூற்பட்டியல்**

1. சு.தமிழ்ச்செல்வி - அளம், ஐந்தாம் பதிப்பு:ஜூன், 2019, நியூ செஞ்சுரி புக் ஹெவுஸ் (பி) லிட், அம்பத்தூர், சென்னை
2. அ.வெண்ணிலா -நிகழ்முகம், முதலாம் பதிப்பு 2012,அகநி பதிப்பகம்.
3. பாவண்ணன் -இரண்டு மரங்கள்,முதலாம் பதிப்பு 2008, புதுமைபித்தன் பதிப்பகம்.